# கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

டிசம்பர் - DECEMBER
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-



## கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.

எபேசியர் 5:10

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| சிறுவர் பகுதி | 11 |



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., C. கியாமிலஸ் கார்த்திக், B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., P. பெவர்லி லிடியா B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 7.00 மணி

**நம்பிக்கை T.V. யில்**

ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். பிலேமோன் ராஜா M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. கிங்ஸ்லி ராஜா M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...






மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசு வழங்கப்படுகிறது.

**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை நாமே நிதானித்து அறிய உதவும்
உன்னத பிதாவின் வார்த்தை

YouTube
@graciouswordcoc


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



# உங்களை நீங்களே ஆராய்ந்து அறியுங்கள்
## EXAMINE YOURSELVES

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், நமக்காக தன்னையே பலியாக தந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால், எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

ஆண்டின் இறுதி நாட்களில் இருக்கின்றோம். இந்நாட்களில் நம்மை நாமே நிதானித்து, ஆராய்ந்து அறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த ஆண்டு நமக்கு எப்படி இருந்தது என உலகம் ஆராயும். ஆனால், இந்த ஆண்டில் நாம் எப்படி இருந்தோம் என கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களை தாங்களே ஆராய்ந்து அறிந்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம்! ஆகையால், இதனைப்பற்றி, பைபிளிலிருந்து பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடன், நம்மை நாமே ஆராய்ந்து அறிவோம்!

### 1. ஏன் சோதித்து பார்க்க வேண்டும்?

ஏன் என்னை நானே சோதித்து பார்க்க வேண்டும்? என நீங்கள் வினவினால், பைபிள், நம்மை நாமே ஆராய்ந்து அறிய சொல்லுகின்றது மற்றும் நம்மை நாமே பரீட்சித்து பார்க்கவும் சொல்லுகின்றது. ஆம், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் தன்னைத் தானே சோதித்து அறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம். 2 கொரிந்தியர் 13:5 "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்."

ஒருவர் முதலாவது தன்னைத்தானே பரிசோதித்து பார்க்க வேண்டியது அவசியம் என்பதனை அறிவுறுத்த, ஆண்டவர் இயேசு மலை பிரசங்கத்தில், உன் கண்ணில் இருக்கின்ற உத்திரத்தினை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கின்ற துரும்பை பார்க்கிறதென்ன என தன்னை தானே ஆராய்ந்து அறியாதவர்களை கடிந்துக்கொண்டார் (மத்தேயு 7:1-5). ஏனெனில் சுய பரிசோதனை என்பது, ஒருவர் தன் பாவத்தை தானே அடையாளம் காணவும், கடவுளுடன் சரியான உறவினை பராமரிக்கப்படுவதை உறுதி செய்யவும், கடவுளுக்கு முன்பாக உண்மையாக வாழவும், பைபிள் போதனைகளுக்கு ஏற்ப ஒருவரின் வாழ்க்கையை நேர்மையாக மதிப்பிடவும் உதவி செய்கின்றது (கலா. 6:3,4).

ஒருவர் செய்யும் செயல்கள், பேசும் பேச்சுக்கள் மற்றும் தேர்வுகளுக்கு அவரே பொறுப்பானவர் என பைபிள் வலியுறுத்துகிறது; மேலும் சுய பரிசோதனை என்பது ஒருவருடைய ஆன்மீக வாழ்க்கைக்கு அவரே பொறுப்பேற்க ஒரு வழியாகும். மேலும், நியாயத்தீர்ப்பிலே நிற்கும் நாளுக்கு நம்மை தயார்படுத்திட சுய பரிசோதனை அவசியமாகும் (2கொரி 5:10; மத்தேயு 12:35-37; 3யோவான் 2).

தங்களை தாங்களே சோதித்தறியாமல், கர்த்தருடைய நாமத்தினாலே தாங்கள் தீர்க்கதரிசனம் சொல்வதினாலும், அற்புதங்களை செய்வதினாலும் மற்றும் பிசாசுகளை துரத்துவதாலும் பரலோகம் சென்றுவிடலாம் என எண்ணி, அநேகர் நியாயத்தீர்ப்பு நாளிலே ஏமாந்து போவார்கள் என ஆண்டவர் இயேசு மிகவும் கடிந்துக்கொண்டார். மேலும், "நீங்கள் பரம பிதாவின் சித்தம் செய்யவில்லை, நீங்கள் அக்கிரமக்காரர், உங்களை நான் அறியேன், என்னை விட்டு (பரலோகத்தினை விட்டு) அகன்று, நரகத்திற்கு போங்கள் என்பேன்'' என்று எச்சரித்துள்ளார் (மத்தேயு 7:21-23). ஆகையால் தான் நாம் நம்மை ஆராய்ந்து (சோதித்து) அறிய வேண்டியது அவசியமாகும்.

## 2. எவைகளை சோதித்து பார்க்க வேண்டும்?

நம்மை நாமே ஏன் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதினை போலவே, நம்மில் எவைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதும் அவசியமானதாகும். பைபிள் எல்லாவற்றையும் சோதித்து பார்த்து, நலமானதினை பிடித்துக்கொள், பொல்லாங்கான எல்லாவற்றையும் விட்டுவிடு என்கின்றது. 1 தெசலோனிக்கேயர் 5:21,22 "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்."

நாம் அடிப்படையில் அவசியமாக சோதித்துப்பார்க்க வேண்டிய காரியங்களையும் பைபிளில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். முதலாவது அவைகளில் நாம் நம்மை சோதித்து நிதானித்து அறிவோம்.

முதலாவதாக, நாம் நமது விசுவாசத்தினை சோதித்துப்பார்க்க வேண்டும். விசுவாசம் என்பது கிறிஸ்தவ வாழ்விற்கு அடிப்படையாகும். இது நாம் கிறிஸ்துவில் இருப்பதினை (வாழ்வதனை) வெளிப்படுத்தும். 2 கொரிந்தியர் 13:5 "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்."

எவரொருவரும், விசுவாசமின்றி கர்த்தருக்கு பிரியமாக இருக்க முடியாது (எபிரெயர் 11:6). விசுவாசம் இல்லையெனில், அவர் கிறிஸ்தவராகவும் இருக்க முடியாது. கிறிஸ்தவத்தின் அடிப்படையாக விசுவாசம் இருக்கின்றது. பொய்யைக் கேட்டு அவ நம்பிக்கையினால், பழத்தினை தின்று பாவம் செய்து, பாவத்தினாலே மாண்டுபோன மனுக்குலத்தினை, சத்தியத்தினை (உண்மையை) கேட்டு, முழு மனதுடன் நம்பி (விசுவாசத்துடன்) கீழ்படிந்து, ஆத்தும மீட்சி அளித்து இரட்சிக்க வேண்டும் என்பதே இறை திட்டம் மற்றும் சித்தமாகும் (ரோமர் 10:9-17).

செயல்களற்ற விசுவாசம், செத்ததாக இருக்கின்றது என்பது நாம் அறிந்ததே. இந்த ஆண்டு நம் விசுவாச வாழ்வு எப்படி இருந்தது. நமது விசுவாசத்திற்கும் செயல்களுக்கும் சம்பந்தமில்லை எனில், நாம் செத்த விசுவாசமுடையவர்களாக வாழ்ந்திருக்கின்றோம் (யாக்கோபு 2:14-26). உதாரணமாக, கர்த்தர் தான் எனக்கு முக்கியம், அவருக்கு தான் என் வாழ்வில் முதலிடம் என்பது நம் விசுவாசமாக இருக்கும். ஆனால், ஒரு நாளை கர்த்தருடைய சமூகத்தில் பைபிள் படித்து, துதித்து, ஜெபித்து துவங்காமல் இருப்போம், மற்றும் துணிகரமாக கர்த்தருடைய காரியங்களை (தொழுகை, வேத ஆராய்ச்சி போன்றவை) தவறவிட்டிருப்போம். ஆகையால், நம் விசுவாச வாழ்வினை சோதித்தறிந்து, சீர்படுத்துவோம்!

அடுத்ததாக, நாம் நமது அன்பினை சோதித்துப் பார்க்க வேண்டும். அன்பு என்பது கிறிஸ்தவ பண்பிற்கு அடிப்படையாகும். இது நாம் கிறிஸ்துவைப்போல் இருப்பதினை (வாழ்வதனை) வெளிப்படுத்தும். 2 கொரிந்தியர் 2:8,9 "அந்தப்படி, உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்தறியும்படி இப்படி எழுதினேன்."

பூரண சற்குணங்களின் கட்டாக (எல்லாம் சேர்ந்ததாக) அன்பு இருக்கின்றது (கொலோ 3:14). நீடிய சாந்தம், தயவு, சகிப்பு தன்மை, நம்பிக்கை, அனைத்தையும் தாங்குதல், சத்தியத்தில் மகிழ்ச்சியடைதல் போன்றவற்றை அன்பு தனக்குள்ளே கொண்டிருக்கின்றது. மேலும், பொறாமை, தீங்கு நினைத்தல், தற்பெருமை, இறுமாப்பு, கோபம், தற்பொழிவு, அநியாயத்தில் மகிழ்தல் போன்றவை இல்லாததாகவும் இருக்கின்றது (1கொரிந்தியர் 13:4-7). மேலும், அன்பு என்பது தெய்வீக குணம். அதனை நாம் உடையவர்களாக இருக்கும் போது, கிறிஸ்துவை போல இருக்கின்றோம்.

நம்முடைய அன்பு மாயமற்றதாக இருக்க வேண்டும் (ரோமர் 12:9). ஏனெனில் பைபிள், அன்பில்லாதவர்கள் எல்லாமிருந்தும்

ஒன்றுமில்லாதவர்கள் என்கின்றது (1 கொரிந்தியர் 13:2). அன்பில்லதவர்கள் எதை செய்தாலும் அது பயனற்றது என்கின்றது, 1கொரிந்தியர் 13:3. அன்பற்ற வாழ்வு என்பது, உயிரின்றி சத்தமிடுகின்ற ஓசைகள் போன்றது. அதில் சத்தங்கள் இருக்கும், ஒருவர் உயிரோடிருப்பதற்கான சத்துவம் இல்லாதிருக்கும் (1கொரிந்தியர் 13:1). ஆகையால் தான், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, நம்மை அவர் நேசிப்பது போல, நாம் மற்றவர்களை நேசிக்க (அன்புகூற) சொன்னார் (யோவான் 15:12).

நாம் அன்புகூருகின்றோமா? நமது அன்புக்கூருதல் எப்படிபட்டதாக இருக்கின்றது? யூத மத தலைவர்களைப்போல, அன்பானவர்களிடம் மாத்திரம் அன்பாக இருக்கின்றோமா? அல்லது நமது ஆண்டவர் இயேசுவைப்போல, நம்மை நேசிக்கின்ற, வெறுக்கின்ற, எதிர்கின்ற, தீங்கிழைத்த எல்லாரிடத்திலும் அன்பாக இருக்கின்றோமா? நம்மை நாமே சோதித்தறிவோம்! வெறுக்கின்றதற்கு காரணங்கள பல இருக்கலாம், ஒருவரை நேசிப்பதற்க்கு கிறிஸ்து ஒருவரே காரணமாக இருக்கட்டும். அந்த நேசமும் கிறிஸ்துவைப்போல இருக்கட்டும் (மத்தேயு 5:39-48; யோவான் 15:12).

அடுத்ததாக, நாம் நமது பரிசுத்தத்தினை சோதித்துப்பார்க்க வேண்டும். பரிசுத்தம் என்பது கிறிஸ்தவ மாண்பிற்கு அடிப்படையாகும். இது நாம் கிறிஸ்துவிற்காக, அவரது மகிமைக்காக இருப்பதினை (வாழ்வதனை) வெளிப்படுத்தும். நாம் நம்மை உயிருள்ள பலியாக, உன்னதமானவருக்கு ஒப்புவித்து, அவரை வழிபட்டு, உலகத்தின் அசுத்தங்களுக்கு விலகி, மறுரூபமாகி பரிசுத்தமாக வாழ்வதே, அவரது நன்மையும், பிரியமும் மற்றும் பரிபூரணமுமான சித்தமாக இருக்கின்றது. ரோமர் 12:1,2 “அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிற தினாலே மறுரூபமாகுங்கள்.”

பரிசுத்தமான வாழ்வை, ‘‘நான் சரியாக இருக்கின்றேன்” “தூய்மையாக இருக்கின்றேன்” என தனக்கேற்றபடி எந்த ஒரு கர்த்தருடைய பிள்ளையும் வாழ முடியாது. கர்த்தருக்கு உகந்தபடி அதாவது, கர்த்தர் ஏற்றுக்கொள்ளும்படி அவருக்கேற்ற பரிசுத்த வாழ்வு வாழவே, ஆபிரகாமின் சரிரத்திற்குரிய சந்ததியை அழைத்ததுபோலவே, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியான நாம் அழைக்கப் பட்டிருக்கின்றோம், மற்றும் பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றோம். லேவியராகமம் 20:26 “கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக! நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன்.”


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

பரிசுத்தம் என்பது நமது அன்பிலும் காணப்பட வேண்டும் (எபேசியர் 1:4), மற்றும் நமது விசுவாசத்திலும் காணப்பட வேண்டும் (யூதா 20). ஏனெனில், விசுவாசம் கிறிஸ்தவ வாழ்வை வாழ உதவும், அன்பு கிறிஸ்துவைப்போல வாழ உதவும். ஆனால், பரிசுத்தம் தான், கிறிஸ்துவையும், பிதாவையும் நாம் மகிமைப்படுத்தும்படி வாழ உதவும் என்பதனை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒரு பிள்ளையின் ஒழுக்கமான வாழ்வு, அதனுடைய பெற்றாருக்கு புகழ்ச்சியை கொண்டுவருவது போல, நமது தூய்மையான வாழ்வே பிதாவிற்கு மகிமையை கொண்டுவரும். 1 பேதுரு 2:11,12 ''பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஇனத்தார் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப் படுத்தும்படி, நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.”

## 3. எவ்விதம் சோதித்து பார்க்க வேண்டும்?

கர்த்தருடைய வழியை (கிறிஸ்தவத்தினை) பின்பற்றுகின்ற, ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளும் (கிறிஸ்தவரும்), அடிப்படையாக சிந்திக்க வேண்டியதும் மற்றும் தங்களை தாங்களே சோதித்துப்பார்க்க வேண்டியதும் என்னவெனில் “இது கர்த்தருக்கு பிரியமானதா?” என்பதேயாகும். பைபிள் நமக்கு முன் வைக்கும் அறைகூவலும் அது தான்! எபேசியர் 5:10 “கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.”

நாம் நமது வழிகளை, அதாவது, கர்த்தருக்குள்ளான நமது பயணத்தினை நாம் சோதித்துப்பார்க்க வேண்டும். நாம் அனுதினமும் செல்லுகின்ற வழி கர்த்தருக்கு பிரியமானதாக இருக்கின்றதா? நாம் எதை நோக்கி பயணிக்கின்றோம்? நித்தியத்தினையா? அல்லது உலகத்தினையா? கலாத்திய நாட்டு கிறிஸ்துவின் திருச்சபையார் நித்தியத்தினை (ஆவியில்) நோக்கி பயணத்தினை துவக்கி, மாம்சத்தினை (உலகம்) நோக்கி திசை மாறி போயினர். அதினிமித்தம் அவர்கள் கடிந்துக்கொள்ளபட்டனர் (கலாத்தியர் 3:1). அது போல நாமும் திசைமாறி செல்லக்கூடிய அபாயம் இருக்கின்றது. நான் சரியாக கிறிஸ்துவை நோக்கி (எபிரெயர் 12:1) சென்றுக்கொண்டிருக்கின்றேனா? என்பதனை நாம் அனுதினமும், அடிக்கடி பரிசோதித்து பார்க்க வேண்டும். திசை திருப்பபட்டிருந்தால், உடனே நேர் வழிக்கு கிறிஸ்துவை நோக்கி திரும்புவோம்! புலம்பல் 3:40,41 “நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம். நாம் நம்முடைய கைகளோடுங்கூட நம்முடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக்கடவோம்.”

நாம் செய்கின்ற காரியங்கள் கர்த்தருக்கு பிரியமானதா? எனக்கு பிரியமானதா? அல்லது வேறு ஒருவரை பிரியப்படுத்த செய்கின்றேனா? என நாம் நமது செயல்களை (பேச்சு, சிந்தனை, செயல்) சோதித்துப்பார்க்க வேண்டும். கலாத்தியர் 6:3,4 “ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான். அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப்பார்க்கக்கடவன். அப்பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும்.”

பிரியமானவர்களே, நம்மை நியாயந்தீர்க்க போகின்ற கிறிஸ்துவின் வசனத்தினாலே, நாம் நம்மை சோதித்தறிய வேண்டும் (யோவான் 12:48; யாக்கோபு 1:25). நம்முடைய இருதயமோ அல்லது பெரிய மனிதர்களின் ஆலோசனைகளோ அல்ல, கர்த்தருடைய வசனமே நம்மை புடமிட அனுமதிப்போம். கிறிஸ்துவின் வசனத்தின் வெளிச்சத்திலே நம்மை சோதித்தறிந்து (1கொரி 10:28). நம்மை கிறிஸ்துவிற்கு நேராக திருப்புவோம். அதற்கேற்ற விதமாக மனந்திருந்துவோம். கர்த்தர் நம்மை காத்து வழிநடத்துவராக.

– அன்புடன், ஆசிரியர்

# கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்துப் பார்ப்போம்!

பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்களும், ஜெபங்களும்!

“தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு நன்றி!” என்று இந்த மாதம் முழுவதும் முழுமனதோடு சொல்லுவோம்.



நன்மைகளெல்லாம் பிதாவினிடத்திலிருந்து வருகிறது எனவே அவருக்கே நன்றி செலுத்துவோம் (யாக். 1:17).

அவர் செய்த நன்மைகளை நினைத்துப் பார்ப்பவர்களே அவருக்கு மறக்காமல் நன்றி செலுத்துவார்கள்.

அவரைத் துதிப்பதின் மூலம் அவரை தோத்தரிப்பதின் மூலம் நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம்! (சங். 100:4).

அவருடைய கிருபை நம்மோடு இருப்பதற்காக நன்றி செலுத்துவோம்! (சங். 136:1).

அவரைத் தொழுதுகொள்ளுவதின் மூலமாக அவருடைய நாமத்தை பிரசித்தப்படுத்துவதின் மூலமாக நன்றி செலுத்துவோம்! (ஏசாயா 12:4).

நாம் அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் அவரில் நிலைத்திருந்து, பெருகி, விசுவாசத்தில் நிலைபெற்று, வாழ்ந்து, ஆவிக்குரிய கனி கொடுத்து, (கொலோ. 2:6-9) நன்றி செலுத்துவோம்!

நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்போதும், எல்லாவற்றிற்காகவும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு நன்றி செலுத்துவோம்! (எபே. 5:18-20; 1தெச. 5:16-18).

நாம் எல்லா சூழ்நிலைகளிலும், கவலைப்படாமல் ஜெபத்தின்மூலம், விண்ணப்பங்களின் மூலம் நன்றி செலுத்துவோம்! (பிலி. 4:6,7). வார்த்தையினால் மாத்திரம் அல்ல கிரியைகளினாலும் நன்றி செலுத்துவோம்!

ஆம், பிரியமானவர்களே! இந்த வருடத்தில் இத்தனை நாட்களும், நிமிடங்களும், ஒவ்வொரு நொடியும் நம்மை கண்ணின்மணிப்போல காத்த நம்முடிய பிதாவாகிய தேவனுக்கு நாம் நமது முழு இருதயத்தோடும், முழு பெலத்தோடும், முழு ஆத்துமாவோடும், நாமும் நம் குடும்பமும் நன்றி செலுத்துவோம்!

நன்மைகளை மட்டுமே நமக்காக செய்ய நம்மோடு இருப்பவர் அவர்; தீமைகளை நம்மைவிட்டு அகற்றின தேவன் அவர். நம்மை பாதுகாப்பவர், நம்மை அரவணைப்பவர், நம் பாவங்களுக்காக தன் சொந்த குமாரனையே சிலுவையில் ஒப்புக் கொடுத்தவர்.

இப்படிப்பட்ட மாபெரும் தெய்வத்தை கொண்ட ஜனமான நாம் அவருக்கு நன்றி செலுத்துவது நமது கடமை அல்லவா?

(தொடர்ச்சி... ௧௰ பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு “பூ” காட்டு மல்லி



காட்டு மல்லி (தாவர வகைப்பாட்டியல்: (Jasminum abyssinicum) ஆங்கிலம் (Forest jasmine) என்பது மல்லிப் பேரினத்தைச் சார்ந்த, இருநூற்றிற்கும் மேற்பட்ட மல்லிகை இனங்களில் ஒன்றாகும். இப்பேரினம், பன்னாட்டு பூக்கும் தாவர மரபுநெறிமுறை குழுமத்தின் (APG IV) முல்லைக் குடும்பத்திலுள்ள 29 பேரினங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. இத்தாவரம் யாசுமினம் அபிசினியம் என்ற தாவரவியல் பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்வினத்தாவரங்கள், மலைப்பகுதியின் உயர்மட்டத்தில் வளரும் கொடியினத் தாவர வகையாகும்.

இதன் தண்டுப்பகுதி 13 செ. மீ. வரை வளரும் இயல்புடையது. தண்டில் இலைகள் பச்சை நிறத்திலும், எதிர் இலையமைவு வகையில் இருக்கின்றன. பூக்களின் பெரும்பகுதி வெண்நிறமாகவும், வெளிப்புறத்தே உப்பிய நிலையிலும் இளஞ்சிவப்பு நிறம் விரவியும் காணப்படுகின்றன.

★ அன்று அன்னாள் தேவனிடம் கேட்ட விண்ணப்பத்திற்கு பதில் கிடைத்ததிற்கு நன்றியுள்ளவளாக அந்தப் பிள்ளையை (சாமுவேலை) கொடுத்தாள்.

★ ஆபிரகாம், சாராள் தன் ஒரே பிள்ளையை, பல வருடங்கள் கழித்து பெற்றிருந்தாலும் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கும்படி அவருக்கே அந்த பிள்ளையை (ஈசாக்கை) பலியாக ஒப்புக்கொடுத்து அர்ப்பணித்தார்கள்.

★ எலிசபெத் – சகரியா தங்களுக்கு பிள்ளை இல்லாதிருந்து, தேவன் சொன்னபடி தங்களுக்கு குழந்தையை கொடுத்தபோது, அந்த பிள்ளையை இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்யும் மனிதனாக வாழ அர்ப்பணித்தனர்.

★ எஸ்தர் தன் வாழ்நாளிலே தான் வளர்க்கப்பட்ட நிலை அறிந்து, அதற்காக நன்றியுள்ளவளாய் இருக்க வேண்டும் என்று தன் ஜீவனை தேவ பிள்ளைகளுக்காக, அவர்களின் விடுதலைக்காக அர்ப்பணிக்கத் துணிந்தவள்.

இப்படி எத்தனையோ உதாரணங்களை நம்மால் வேதத்தில் காண முடியும். இவையெல்லாம் நாம் பின்பற்ற வேண்டிய முன்மாதிரிகளாகும். நாமும் நம் வாழ்வில் நாம் பெற்ற நன்மைகளில், நன்றியினை வெளிப்பாடாக நம்முடைய தேவனுக்கென்று ஏதாவது செய்ய வேண்டும் என்ற உணர்வை நமக்குள்ளும் கொடுக்கின்றது.

நம்முடைய நன்றியை காணிக்கையாக, அவருக்கு செலுத்துவோம்! சபையின் தேவைகளை (ஏழை எளியோர், திக்கற்றவர்கள், விதவைகள், ஆதரவு இல்லாதவர்கள், இயலாமையில் இருப்பவர்கள்) சந்திப்போம். மேலும், திருவசனத்தை நமக்கு போதிப்பவர்களையும், நம் ஆத்துமாவிற்கு வழிகாட்டியாக இருப்பவர்களையும் கனப் படுத்துவோம். தேவ சித்தத்தின்படி கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாவற்றிலேயும் நமக்கு வெற்றியைக் கொடுக்கிற நம்முடைய தேவனுக்கு நன்றி செலுத்துவோம்! (1 கொரி. 15:57; 2 கொரி. 2:14).

தேவன் செய்த நன்மைகளை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போம். அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருப்போம். நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தாரே! நாம் வேண்டுவதற்கும், நினைப்பதற்கும் அதிகமாய் நம்மை ஆசீர்வதித்தாரே! அவருக்கு நாம் எத்தனையாய் நன்றி சொல்ல வேண்டும்!

நாம் ஜெபிக்கும்போது பிதாவே! "நீர் செய்த நன்மைகளை மறவாமல் நாங்கள் நன்றியுள்ள இருதயத்தோடு இருக்க எங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று ஜெபிப்போம்! ஆமென்.

பிரியமுடன்: சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil: Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil: Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

வாலிபர் பகுதி...

# பெதஸ்தா குளத்தில் வியாதியாயிருந்த மனிதனை சுகமாக்குதல்

இரக்கத்தின் வீடு என்ற பொருள் கொண்ட அந்தக் குளத்தின் இரக்கம் என்னவென்றால், ஒரு தேவதூதன் எப்பொழுதாவது அந்தக் குளத்திலிறங்கி தண்ணீரைக் கலக்குவான். அவ்வாறு அவன் கலக்கப்படும் போது எந்த வியாதியஸ்தர் முதலில் அந்தக் குளத்தில் இறங்குகிறானோ அவன் எத்தனை வருட வியாதியஸ்தனாக இருந்தாலும், எப்படிப்பட்ட வியாதி உடையவனாய் இருந்தாலும், அவன் சுகம் பெறுவான். அந்த சுகத்தையும் இரக்கத்தையும் பெற ஏராளமான பார்வையற்றோர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் எப்பொழுது தண்ணீர் கலங்குமென்று காத்திருப்பார்கள். இதில் முதலில் இறங்குகிற மனிதனுக்கு மட்டுமே சுகம் கிடைக்கும். அதன்பின் இறங்குகிறவர்களுக்குச் சுகம் கிடைப்பதில்லை. தேவதூதன் எப்பொழுதாவது ஒரு தடவை தான் வருவான். அடிக்கடி வருவதுமில்லை. கால்கள் நல்ல நிலைமையில் இருப்பவர்கள் தான் இந்த அற்புத சுகத்தைப் பெற முடியும். நீண்ட நாட்களாக நடக்கமுடியாமல் இருப்பவர்களுக்கு யாரும் உதவி செய்வதும் இல்லை. இவர்கள் கைவிடப்பட்ட நிலையிருந்தனர்.

இந்தக் குளக்கரையில் 38 வருடமாக கை, கால்கள் இயங்காமலிருந்து பரிதாபமான நிலைமையில் திமிர்வாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனைப் பார்க்கிறோம். இஸ்ரவேலரை 38 ஆண்டுகள் கானானுக்குள் பிரவேசிக்க விடாமல் வனாந்தரத்தில் அலையும்படி தேவன் அளித்த தண்டனைக்கு இந்த மனிதனின் 38 ஆண்டுகள் ஒப்பாயிருக்கிறது (உபாகமம் 2 : 14). அந்த 38 ஆண்டுகளில் யுத்தமனிதர்கள் அனைவரும் மாண்டு போனார்கள் (உபாகமம் 2 : 14). பெதஸ்தாவில் படுத்திருந்த மனிதன் , பாவத்தில் தோற்கடிக்கப்பட்டு, பாவத்தின் மீது ஜெயித்து நடக்க முடியாத இன்றைய விசுவாசிகளைக் குறிக்கிறது. மனித முயற்சிகளும், அவனுடைய வல்லமைகளும் கர்த்தருக்கு முன் ஒன்றுமில்லை என்றெண்ணம் வேண்டும். நாம் ஒன்றுமிலை என்ற நிலைக்கு வரும் வரை கர்த்தர் காத்திருக்கிறார். இவன் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை வியாதியில் தான் கழித்திருக்கிறான்.

இந்த மனிதன் தன்னுடைய வீட்டாரால், உறவினரால், நண்பர்களால் கைவிடப்பட்டவனாய், உதவியற்றவனாய், நம்பிக்கை அற்றவனாயிருந்தான். அவனது ஒரே நம்பிக்கை இந்த குளம்தான். அதிலும் வேறொருவர் உதவி செய்யாததால் அந்த நம்பிக்கையையும் இழந்து விட்டான். இதுவே நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழும் மக்களின் நிலமையாயிருக்கிறது. இவன் இத்தனை கேடான நிலமைக்கு வந்ததற்குக் காரணம் அவனுடைய பாவமே. பாவமானது ஒரு மனிதனை 38 வருடங்கள் செயலற்றவனாக மாற்றியிருப்பதைப் பார்க்கிறோம்.

எனவே நம்பிக்கையில்லாத நிலமையில் இருந்த அவனைத் தேடி இயேசு வந்தார். இயேசுவின் ஒரு பக்கம் பெதஸ்தா குளம், மறுபக்கம் ஆட்டுவாசல். இரண்டுக்குமிடையே நின்று கொண்டிருந்தார். இயேசு ஒரு பக்கம் இரக்கம் நிறைந்தவராகவும், நோய்களைக் குணமாக்குகிறவராகவும், மறுபக்கம் இரத்தம் சிந்தி பாவமன்னிப்பை அருளுகிற வராகவும் நின்றார்.

இயேசு அந்த மனிதனின் நிர்பந்தமான நிலமையைக் கண்டார். வியாதியஸ்தன் இயேசுவைப் பார்த்ததாகச் சொல்லப்படவில்லை. அதனால் அந்த மனிதனிடம் இயேசு சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அவன் சொஸ்தமடைய வேண்டுமென்ற வாஞ்சையை இயேசு அவனிடம் உருவாக்கினார். தன்னுடைய பலவீனத்தைக் குறித்து அவன் தன்னிடம் விண்ணப்பம் பண்ண வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் (எசேக்கியேல் 36: 37). அதற்கு அவன் ஆம் என்றோ, இல்லை என்றோ பதில் சொல்லாமல், தன்னுடைய கடந்த காலத்தைச் சொல்லிப் புலம்புகிறான்.

எத்தனை முறையோ அந்தக் குளத்தில் தூதன் கலக்கியதையும், நோயாளிகள் சுகம் பெற்றதையும் தான் பார்த்திருப்பதாகவும், ஆனால் தன்னைத் தூக்கிக்கொண்டு போய்விட யாருமில்லை என்று உருக்கத்தோடு கூறுகிறான். அவனுக்கு இயேசு எப்படிப்பட்டவர் என்று தெரியவில்லை.

அவன்மேல் மனதுருகுகிற கர்த்தர் அவனிடம் எழுந்திரு என்றும் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றும் கூறினார். அவனிடம் விசுவாசம் இருந்ததாகவும் சொல்லப்படவில்லை. தான் சுகமடைய வேண்டுமென்று இயேசுவிடம் அவன் விண்ணப்பிக்கவும் இல்லை. இதில் இயேசு அவனுக்கு மூன்று அற்புதங்களைச் செய்தார். 38 வருடமாக நடக்க முடியாமலிருந்தவனுக்கு, அந்த வியாதியிலிருந்து சுகம் கொடுத்தார். படுக்கையையும் எடுத்துக்கொண்டு நடக்கிற பலத்தைக் கொடுத்தார். அவனுடைய பாவங்களையும் மன்னித்தார். இயேசு அவனிடம் எழுந்து நட என்ற வார்த்தையைத்தான் கூறினார். பெதஸ்தா குளத்துக்குள் அவனை அழைத்துக் கொண்டு செல்லவில்லை. 38 வருடமாக அவனை முடக்கி வைத்த அவனுடைய நாடி நரம்புகள் உயிரடைந்தது. அந்த நிமிடமே அவன் குனிந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போனான். அவருடைய இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

இயேசுவின் இரத்தம் நிரம்பிய இந்தக் குளத்தில் யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் இறங்கலாம். தேவதூதன் கலக்கும் வரைக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இயேசு தம்மண்டை வருகிற ஒருவரையும் புறம்பே தள்ளுவதில்லை. எப்படிப்பட்ட பாவங்களையும் மன்னிப்பதற்கு இயேசுவின் இரத்தமும், அவரது மனதுருக்கமும் காத்திருக்கிறது. பாவத்தில் விளைவாகத் தான் சாபங்கள் வருகிறது. எனவே அதிக கேடு நமக்கு வராதபடி நாம் பாவம் செய்யாதபடி நம்மைக் காத்துக்கொள்வோம்.

– உங்கள் அண்ணன் **JP**

பொதுவான செய்திகள்

# அரசியல் சாசன தினம் (இந்தியா)

இந்திய அரசியல் சாசன தினம் அல்லது இந்திய அரசியலமைப்பு நாள் ( Constitution Day Of India ) அல்லது சட்ட தினம் (Law Day) எனப்படும் இந்நாள், 2015 நவம்பர் 26 ஆம் திகதியன்று முதல் முறையாக அனுசரிக்கப்படுவதாகவும். மேலும் இந்திய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட தினமான நவம்பர் 26 ஆம் நாளை, அரசியலமைப்பு தினமாக, கொண்டாடப்படுவதாக அறியப்படுகிறது.

**துவக்கம்:**

இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் வரைவுக்குழுவின் தலைவராக செயற்பட்ட டாக்டர் அம்பேத்கர் என்பவரை கௌரவிக்கும் விதமாகவும், நினைவுகூரும் வகையிலும் மற்றும் இந்திய அரசியலமைப்புக்காக அயாரதுழைத்த அனைவருக்கும் மரியாதை செய்யும் விதமாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியின் தலைமையில் உள்ள இந்திய அரசால் 2015 ஆம் ஆண்டு, நவம்பர் 26 இல் அரசியல் சாசன தினம் துவக்கப்பட்டு கொண்டாடப்பட்டது.

**வரலாறு:**

தெற்கு ஆசியா நாடான இந்தியாவின் பெரும்பகுதி 1858 லிருந்து 1947 வரையில் ஆங்கிலேயர்கள் காலனித்துவ ஆட்சிக்கு கீழ் இருந்துள்ளது. இக்காலகட்டத்தில், ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலைப்பெற இந்திய சுதந்திர இயக்கம் படிப்படியாக முயன்று வெற்றியை ஈட்டியது. 1934 ஆம் ஆண்டுவாக்கில் இந்திய நாட்டிற்கு அரசியல் நிர்ணயசபை அமைக்க ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பிறகு 1936 இலும், மற்றும் 1939-லும் இருமுறை இக்கோரிக்கையை பற்றி வலியுறுத்தப்பட்டன. அதன்படி 1942 ஆம் ஆண்டு மார்ச் இல் கிரிப்ஸ் தூதுக்குழு அரசியல் நிர்ணய சபையை உருவாக்க பரிந்துரைக்கப்பட்டது. அதன்பின்பு 1946 மே இல் அரசியல் நிர்ணய சபை ஏற்பத்த பரிந்துரைக்கப்பட்டு, 1946 சூலையில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடைபெற்றது 1946 திசம்பர் 11 இல் அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்டு அச்சபையின் தலைவராக இராசேந்திர பிரசாத் தேர்வு செய்யப்பட்டார்.

1947 ஆகத்து 15 க்கு (விடுதலைக்கு) பின்பு, பிரித்தானியாவின் இந்தியா, இந்திய மாகாணம், பாக்கித்தான் மாகாணம் என இருவேறு பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச்சாசனத்தை, உருவாக்கும் பணியை அரசியல் நிர்ணயசபை குழு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

# ஆபிரகாமிற்கு வந்த கர்த்தருடைய அழைப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கீங்க?. இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா?. பரிசுத்த கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.


கர்த்தருடைய வார்த்தைக்கு முழுவதும் கீழ்ப்படிந்து நடந்த மற்றும் விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆபிரகாமைப் பற்றியும், அவருக்கு கிடைத்த கர்த்தருடைய அழைப்பைப் பற்றியும் இந்த மாதம் படிக்கலாம் வாங்க செல்லங்களா!!!

ஒருநாள் கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமிற்கு உண்டாகி, நீ உன்னுடைய நாட்டையும், உன்னுடைய உறவுகளையும் மற்றும் உன்னுடைய தகப்பனுடைய வீட்டையும் விட்டு நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்குப் போ!!! என்று கர்த்தர் ஆபிரகாமிடம் சொன்னார். அருமையான செல்லங்களா நம் அனைவருக்கும் நம்முடைய சொந்த ஊர் எந்த அளவிற்கு பிடிக்கும்? நிச்சயமாக மிகவும் பிடிக்கும் அல்லவா!!!. ஆனால் கர்த்தருடைய அழைப்போ ஆபிரகாமை தன்னுடைய சொந்த நாட்டையே விட்டுவிட்டு வேறு நாட்டிற்கு செல்லும்படி கட்டளையிடுகிறார். ஆபிரகாமும் கர்த்தர் சொன்னபடியே தன்னுடைய சொந்த நாட்டை விட்டுவிட்டு புறப்பட்டுப் போனார். கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளா கர்த்தருடைய வார்த்தைக்கு எந்த அளவிற்கு மரியாதையுடன் கீழ்ப்படியவேண்டும் என்று விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆபிரகாமிடம் இருந்து கற்றுக்கொள்ளலாம்.

ஆபிரகாமும், அவருடைய மனைவியாகிய சாராளும் கர்த்தர் சொன்ன கானான் என்ற நாட்டிற்கு வந்து சேர்ந்தார். அநேக வருடங்கள் ஆபிரகாமிற்கும் சாராளுக்கும் பிள்ளை இல்லாமல் இருந்தது. ஆபிரகாம் கிட்டதட்ட நூறுவயது உடையவராய் இருந்தார். அப்பொழுது ஒருநாள் ஆபிரகாமிற்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி உனக்கும் உன்னுடைய மனைவியாகிய சாராளுக்கும் ஒரு பிள்ளை பாக்கியத்தை தருவேன் என்று சொன்னார். அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து சிரித்துக்கொண்டே கர்த்தரை நோக்கி நூறு வயதானவனுக்கு பிள்ளை பிறக்குமோ? என்று தன்னுடைய இருதயத்திலே சொல்லிக் கொண்டான். ஆனாலும் கர்த்தருடைய வார்த்தையின்மேல் ஆபிரகாம் விசுவாசமாய் இருந்தார். பின்பு கர்த்தர் சொன்னபடியே சாராள் மற்றும் ஆபிரகாமை ஆசீர்வதித்து அவர்களுக்கு பிள்ளை பாக்கியத்தை கட்டளையிட்டார்.

பிரியமான பிள்ளைகளா!!! கர்த்தருடைய வார்த்தைக்கு ஆபிரகாம் கொடுத்த மரியாதையும் கீழ்ப்படிதலும் தொடர்ந்து அவரை ஆசீர்வதித்தது.

மீண்டும் ஒரு நாள் கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமிற்கு உண்டாகி, “உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியிடு’’ என்றார். கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளா!!! கிட்டத்தட்ட நூறு வயதானபோது ஆபிரகாமிற்கு



பிறந்த மகன்தான் ஈசாக்கு, அநேக வருடங்கள் கழித்து பிறக்கும் எந்தக் குழந்தையின்மீதும் பெற்றோருக்கு வழக்கத்தைவிட அதிக அன்பு இருக்கும் அல்லவா. அப்படி அன்பு செலுத்தி வளர்த்த மகனை, ஆபிரகாம் மிகவும் விசுவாசித்து கீழ்ப்படிதலாய் இருக்கும் தன்னுடைய கர்த்தர் பலியாக கேட்கிறார்.

ஆபிரகாம் சிறிதும் தயங்காமல் தன்னுடைய மகனான ஈசாக்கை கூட்டிக்கொண்டு கர்த்தர் சொன்ன மலைகளில் ஒன்றிற்கு சென்று பலியிடும்படி கட்டைகளை அடுக்கி தன்னுடைய மகனை கட்டைகளின்மேல் படுக்கச் செய்து, பலியிடும்படி கத்தியை ஓங்கினான். அந்தத் தருணத்திலே கர்த்தருடைய சத்தம் உண்டாகி, “பிள்ளையாண்டான்மேல் கத்தியைப் போடாதே.” என்றார். அதனால் கர்த்தர் ஆபிரகாமை நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து வானத்து நட்சத்திரங்களைபோல பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார்.

கர்த்தருக்குப் பிரியமான செல்லப் பிள்ளைகளா!! விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம் தாத்தாவிடம் இருந்து ஒரு மிகப்பெரிய பாடத்தை நாம் கற்றுக் கொண்டுள்ளோம். அதாவது கர்த்தர் எந்த ஒரு வசனத்தின் மூலமாவது நம்மிடம் எதையாவது செய்யுங்கள் என்று சொன்னால் நாமும் ஆபிரகாம் தாத்தாவைப் போலவே மறுக்காமல் செய்யவேண்டும் அப்படிச் செய்தால் நமக்கு என்ன கிடைக்கும்? எந்த ஒரு சூழ்நிலையிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கும். நாமும் ஆபிரகாம் தாத்தாவைப்போல ஞாயிற்றுக்கிழமை சபைகளில் பிரசங்கிக்கப்படும் வார்த்தைகளுக்கு மரியாதையுடன் கீழ்ப்படிவோமா? பரிசுத்த கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!!!

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 12:1**

“புத்திமதிகளை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான்; கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவனோ மிருககுணமுள்ளவன்.”


**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**

# பெத்தேல் (தேவனுடைய வீடு)

செல்லக்குட்டிங்களா! நல்லா இருக்கீங்களா ?நல்லா படிக்கிறீங்களா? இந்த வருடத்தின் கடைசி மாதத்திலே இருக்கிறோம். இந்த வருடம் முழுவதும் கர்த்தருக்கு நன்றியுள்ள பிள்ளைகளாக என்ன செய்தீர்கள்? Very good.

ஆதியாகமம் 28:10-19 உங்கள் பைபிளில் எடுத்துக் கொள்ளுங்கள். யாக்கோபு என்னும் பேர் கொண்ட ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய அப்பா பெயர் ஈசாக்கு. ஒரு நாள் யாக்கோபு அண்ணனை தன் மாமனின் ஊருக்கு போகும்படி அப்பா சொன்னார். அப்பொழுது யாக்கோபு அண்ணன் எழுந்து தனக்கு சாப்பிட உணவையும், தாகத்துக்கு தண்ணீரையும் எடுத்துக்கொண்டு வழி நடந்து சென்று கொண்டிருந்தான். அப்படி நடந்து செல்கையில் ஈரப்பதமுள்ள காற்று தன்மேல் மோதி செல்கிறதையும், மரங்களும், செடி, கொடிகளும் காற்றினால் அசைந்து நடனம் ஆடுவதையும், பூக்கள் எல்லாம் சிரிப்பதையும் கண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு சென்று கொண்டிருந்தான்.

அப்பொழுது யாக்கோபு ஒரு இடத்தில் வந்து சூரியன் மறைந்தபடியினால் அந்த இடத்திலேயே ராத்தங்கி அந்த இடத்தில் உள்ள ஒரு கல்லை எடுத்து, தன் தலையின் கீழ் வைத்து அங்கே தூங்கும்படியாக படுத்துக் கொண்டான். நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டான். இரவிலே ஆந்தைகளும், கோட்டான்களும், பருந்துகளும், தவளைகளும் சத்தமிட்டு கொண்டிருந்தன. அந்த சத்தம் எதுவும் அவன் காதில் விழவில்லை. அப்பொழுது அவனுக்கு கனவு ஒன்று தோன்றியது. அந்த கனவிலே அவன் கண்டது ஒரு ஏணி பூமியிலே வைக்கப் பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டி இருந்தது. அதிலே தேவ தூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள். அதற்கு மேலாக சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நின்று யாக்கோபுவிடம் பேசுகிறார். அப்பொழுது கர்த்தர் யாக்கோபை நோக்கி நீ படுத்திருக்கிற இந்த பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். இந்த பூமியின் வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.



நான் உன்னோடு இருந்து நீ போகிற இடத்தில் எல்லாம் உன்னை காத்து இந்த தேசத்துக்கு உன்னை திரும்பி வர பண்ணுவேன். நான் உனக்கு சொன்னதை செய்யும் அளவும் உன்னை கைவிடுவதில்லை என்றார். அப்பொழுது யாக்கோபுக்கு தூக்கம் தெளிந்து, விழித்து எழுந்தான். இந்த இடம் கர்த்தருடைய வீடு இல்லாமல் வேறல்ல என்று சொல்லி, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து அதை தூணாக நிறுத்தி, அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பெயரிட்டான்.

சிறு பிள்ளைகளே!! நீங்கள் நன்றாக கவனியுங்கள் யாக்கோபு அண்ணன் ஏதோ ஒரு நோக்கத்திற்காக சென்று கொண்டிருந்தார். ஆனால் கர்த்தர் அன்று இரவிலே யாக்கோபுக்கு கனவில் தோன்றி பெத்தேல் என்னும் இந்த இடத்தை உனக்கு ஆசீர்வாதமாக கொடுத்தேன் என்றார். அதுபோல பிள்ளைகளே உங்கள் எல்லாரிடமும் கர்த்தர் ஒன்றைக் கொடுத்துள்ளார். அதாவது கிறிஸ்து தம்முடைய சபையை கொடுத்து ஆசீர்வதித்துள்ளார்.

அந்த சபைக்காக இந்த சிறு வயதிலிருந்து பயிற்சிகளை எடுத்துக்கொண்டு, சபையின் வளர்ச்சிக்காகவும், சபையின் தேவைகளுக்காகவும் நான் உதவி செய்வேன் என்கிற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். கர்த்தர் யாக்கோபோடு இருந்ததுபோல நம் இயேசு ஆண்டவர் உங்களோடு இருப்பாராக. ஆமென்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 33:20**

" நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்."

– சகோ. பீட்டர்


# கடவுளுக்கு நன்றி சொன்ன பிசாசு நீங்கின மனிதன்

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா, எப்படியிருக்கிறீர்கள்? நல்லா இருக்கிறீர்களா? உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன்.

பிள்ளைகளா! கடந்த 11 மாதங்களாக கடவுள் நம்மைப் பாதுகாத்து, எல்லாவற்றிலேயும்கூட இருந்து நடத்தினதற்காக நன்றி சொல்வீர்களா?

பைபிளில், ரொம்ப நாளாய் பிசாசு பிடித்த ஒரு மனிதன் இருந்தான், அவனுக்கு லேகியோன் என்று பெயர். ஏன் அந்த பெயர் தெரியுமா? அநேக பிசாசு அவனுக்குள் இருந்ததால் தான். ஒருமுறை ஆண்டவர் இயேசு வரும்போது அவருக்கு எதிராக இவன் சென்றான். அவன் வஸ்திரம் போட்டிருக்க மாட்டான், சங்கிலியாலும், விலங்கினாலும் கட்டப் பட்டிருப்பான். வீட்டில் தங்கமாட்டான், கல்லறையிலே ரொம்ப நாளாய் தங்கியவன். அவன் இயேசுவை பார்த்து என்ன சொன்னான் தெரியுமா? என்னை வேதனைப்படுத்தாதபடி உம்மை வேண்டிக் கொள்கிறேன் என்றான்.

இயேசு அவனுக்குள் இருந்த அசுத்த ஆவியை துரத்தினார். உடனே அவன் வஸ்திரம் தரித்து, அவர் செய்த நன்மையை நினைத்து அவர் பாதத்தில் அமர்ந்து அவர்கூடவே இருக்க ஆசைபட்டான். இயேசு என்ன சொன்னார் தெரியுமா? நீ உன் வீட்டுக்கு போ, நான் உனக்கு செய்தவைகளை எல்லாருக்கும் அறிவி என்றார். அவர் சொன்னபடி அநேகருக்கு இயேசுவை பற்றி அறிவித்தான். அவருக்கு கீழ்படிந்து நன்றியை வெளிபடுத்தினான்.



கடவுளுக்கு பிரியமானவர்களே! நீங்களும் உங்களுக்கு கடவுள் செய்த நன்மையை நினைத்து நன்றி சொல்வீர்களா? உணவு கொடுத்திருக்காரு, உடை கொடுத்திருக்காரு, இருக்க இடம் கொடுத்திருக்காரு, அம்மா அப்பா கொடுத்திருக்காரு இப்படி ஒவ்வொன்றாய் நினைத்து, அவருக்கு நன்றி என்று இந்த பிசாசு நீங்கின அண்ணனை போல், இயேசுவை பற்றி எல்லாருக்கும் சொல்வீர்களா! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 103:2**

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே"

— சகோ. அன்பு ஏசுதாஸ்

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | M. ஜோனத்தான் | - | கரூர் |
| 1. | A. ஹானா ஜோதிராணி | - | மதுரை |
| 2. | A. ஆடின் ஃபோயோ | - | இராணிபேட்டை |
| 3. | S. ஜோசுவா | - | இராணிபேட்டை |
| 4. | S. ஜூடித் ஆராதனா | - | இராணிபேட்டை |
| 5. | S. ஆலன் காலேப் | - | இராணிபேட்டை |
| 6. | M. ஜோனத்தான் | - | கரூர் |
| 7. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - | மதுரை |
| 8. | A. சுபிக்ஷா | - | பெருமாள் வலசு |
| 9. | D. டேஃப்னி | - | சென்னை |
| 10. | D. ஜூனித்தா | - | சென்னை |
| 11. | M. அபி பிலேமோன் | - | எழுகம்வலசு |
| 12. | J. நவீன் பீட்டர் | - | மதுரை |
| 13. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - | மதுரை |
| 14. | S. ஜூடா லியோ | - | ரஸ்தா |
| 15. | G. ஜெர்லின் | - | ரஸ்தா |

# ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தல்

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன், ஈசாக்கு – ரெபெக்காள் தம்பதிக்கு இரட்டை பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவன் பெயர் ஏசா, இளையவன் பெயர் யாக்கோபு.

ஈசாக்கு முதிர்வயதாகி, பார்வையற்றுப்போனபோது, தன் மூத்த மகனாகிய ஏசாவை அழைத்து: எனக்கு வயதாகிவிட்டது, நீ காட்டுக்குப்போய் எனக்காக வேட்டையாடி எனக்கு பிடித்தமானவைகளை சமைத்து, கொண்டுவா; நான் மரிக்கும் முன்னே உன்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்றார். இவர்கள் பேசிக்கொண்டிருப்பதை கேட்ட ரெபெக்காள் யாக்கோபை அழைத்து: நீ ஆட்டு மந்தைக்குப் போய் இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டுவா, நான் உன் தகப்பனுக்கு பிரியமானதை சமைத்து தருகிறேன். நீ அவைகளை உன் தகப்பனுக்கு சாப்பிட கொடுத்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள் என்றாள்.

அதைப்போலவே தன் தகப்பனுக்கு பிரியமாக சமைத்துக் கொண்டுபோய் அவருக்குக் கொடுத்தான் யாக்கோபு. ஈசாக்கு வந்தது ஏசாவென்று உறுதிப்படுத்திக்கொண்டு அவனை ஆசீர்வதிக்கத் தொடங்கினார்.

ஈசாக்கு யாக்கோபை தன்னை அருகில் வந்து முத்தஞ்செய்ய சொன்னார். அவன் அவரை முத்தஞ் செய்தபின்பு: தேவன் உனக்கு மிகுந்த தானியத்தையும், திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும், இனங்கள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள் உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும்; உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார்.



குட்டீஸ்! இந்த யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்கு கிடைக்க வேண்டிய ஆசீர்வாதத்தை ஏமாற்றி வாங்கிக் கொண்டான். அதனால் ஏசாவுக்கு அவன்மேல் மிகுந்த எரிச்சலும், கோபமும் உண்டானது. இதுவரை ஒன்றாக, அன்பாக, இணைந்து, சமாதானமாய் இருந்த இவர்கள் யாக்கோபு செய்த ஏமாற்று வேலை காரணமாக தனிதனியாக பிரியும் சூழல் ஏற்பட்டது. அதுமட்டுமல்ல யாக்கோபு தன் தகப்பனையும், தாயையும் விட்டு பிரிந்து செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஏமாற்றுதல் என்பது தேவன் வெறுக்கக்கூடிய செயல் ஆகும். யாரையும் ஏமாற்றக்கூடாது. நமது குடும்பத்தாரிடமும், நண்பர்களிடமும் எப்பொழுதும் உண்மையாயிருக்க வேண்டும். அதுவே நம்மைப் படைத்த கர்த்தரின் விருப்பமாக உள்ளது. அப்படியிருக்க பயிற்சி செய்வீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்!

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 12:22**

"பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்."

– சகோதரி. குயினி பிரதீப்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. ஆபிரகாமின் எத்தனை வயதில் ஈசாக்கு பிறந்தார்? கர்த்தர் ஆபிரகாமிடம் கேட்டது என்ன?
2. பெத்தேல் என்றால் என்ன அர்த்தம்?
3. லேகியோன் என்றால் என்ன அர்த்தம்?
4. பிசாசு நீங்கின மனிதனிடம் ஆண்டவர் என்ன கூறினார்?
5. யாக்கோபு யாருடைய ஆசீர்வாதத்தை., யாரிடமிருந்து பெற்றுக்கொண்டான்?

## டிசம்பர் மாத கேள்விகள்
### (மாற்கு சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)

1. வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருந்தவன் யார்?
2. இயேசுவை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவியவர் யார்?
3. மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று இயேசு யாரிடம் கூறினார்?
4. இயேசுவை அறிந்திருந்தவை எவை?
5. ஆயத்துறையில் உட்கார்ந்திருந்தவன் யார்?
6. தாவீது தெய்வ சமுகத்து அப்பங்களை புசித்தபோது இருந்த பிரதான ஆசாரியன் யார்?
7. பொவெனர்கேஸ் என்பதன் அர்த்தம் என்ன?
8. இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனங்களை எடுத்துப்போடுகிறவன் யார்?
9. இயேசுவுக்கு முன்பாக விழுந்து உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னவள் யார்?
10. தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலும் கனவீனமடைபவன் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-01-2026**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 15:19 | 6. ரோமர் 15:7 |
| 2. ரோமர் 16:1 | 7. ரோமர் 15:19 |
| 3. ரோமர் 16:3,4 | 8. ரோமர் 15:21 |
| 4. ரோமர் 16:8 | 9. ரோமர் 15:1 |
| 5. ரோமர் 16:10 | 10. ரோமர் 16:23 |


### சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்




1) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
2) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
3) Mr. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
4) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
5) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
6) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
7) S. ஜெபமணி - தென்காசி
8) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
9) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
10) A. லலிதா - புதுக்கோட்டை
11) S.G. சேகர் - இராணிபேட்டை
12) Mrs. பிளாரன்ஸ் முத்தையா - மதுரை
13) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
14) Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
15) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
16) R. ஞானசிரோன்மணி - மதுரை
17) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
18) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
19) S. பாக்கியராஜும் - மதுரை
20) Mrs. சூரிய பிரியா - மதுரை
21) Mrs. ராணி குமரன் - கரூர்
22) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
23) Mrs. J. பூங்கொடி ரவி - முத்தூர்
24) M. ஈஸ்வரி முருகன் - கரூர்
25) M. ராஜா - கரூர்
26) S. கார்த்திக் - கரூர்
27) S. பேபி சந்தோஷ்குமார் - தங்கமேடு
28) J. ஜான்சி - ஆனைமலை
29) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
30) Mrs. R. சரோஜா - தென்கலம்
31) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
32) S. ஷீபா ஞானவின்சா - டோனாவூர்
33) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
34) Mr. டேவிட் ராஜ் - அனவரதநல்லூர்
35) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
36) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
37) Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
38) J. கிறிஸ்டோபர் தாஸ் - நாகர்கோயில்
39) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
40) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
41) Mrs. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
42) A. அரவிந்த் - மதுரை
43) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
44) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
45) N. ஜான் செல்லையா - மதுரை
46) Mrs.J. ஜெயராணி ஜான் - மதுரை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th December 2025**
**Posted at Arasaradi HPO on 10th & 11th December 2025**



## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்





அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


**If undelivered please return to :**

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

**To**

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers